Student/Registration Number

Centre Number

**2005** PUBLIC EXAMINATION

# Tamil

## Continuers Level

**Wednesday 19 October: 2 p.m. Eastern Standard Time**

Reading Time: 10 minutes
Working Time: 2 hours and 50 minutes

- *You have 10 minutes to read all the papers and to familiarise yourself with the requirements of the questions. You must not write during this time.*
- *Monolingual and/or bilingual printed dictionaries may be consulted during the reading time and also during the examination.*

## Section 1: Listening and Responding (30 marks)

**Instructions to Students**

1. Allow approximately 50 minutes for Section 1.
2. Write all your answers to the questions in Section 1 in this booklet in blue or black ink or ball-point pen. Space is provided for you to make notes.
3. You must answer ALL questions in Part A and Part B.
4. Answer Part A in ENGLISH and Part B in TAMIL.
5. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
6. All question booklets will be collected at the end of the examination.

*This examination is used for the HSC (New South Wales), the NTCE (Northern Territory), the SACE (South Australia), the TCE (Tasmania), the VCE (Victoria), and the WACE (Western Australia).*

*© Victorian Curriculum and Assessment Authority 2005*

www.theallpapers.com

**Part A** (Questions 1–3)
(20 marks)

*When judging performance in this part, the examiner(s) will take into account the extent to which the student demonstrates the capacity to:*

- *understand general and specific aspects of texts by identifying and analysing information and convey the information accurately and appropriately.*

You will hear THREE texts. Each text will be played twice. There will be a short break between the first and second playings in which you may make notes.

Listen carefully to each text and then answer the questions in ENGLISH.

**Marks** | You may make notes in this space.

**Text 1** Click here

1. Write the message to be sent to Sivahamy by Seynthan. **3**

**Text 2** Click here

2. (a) Why would the King accept either of his destinities? **2**

   -
   -

   (b) Describe the Queen's major concerns in this situation. **2**

   -
   -



www.theallpapers.com

Marks | You may make notes in this space.

(c) Give one social custom that was prevalent in Tamil society during the time of this event. Did this custom apply to ordinary citizens or only members of the royal family? Give evidence from the text. **3**

**Text 3** Click here

3. (a) Give two pieces of evidence from the text that an Arangetram was held for Niruban. **2**

•

•

(b) What improvements have been made inside the Mangalam Hall since Santha last visited? **4**

•

•

•

•

(c) Why is Shanker such a suitable person for the position he holds? **4**



www.theallpapers.com

**Part B** (Questions 4–5)
(10 marks)

---

*When judging performance in this part, the examiner(s) will take into account the extent to which the student demonstrates the capacity to:*

- *understand general and specific aspects of texts by identifying and analysing information;*
- *convey the information accurately and appropriately.*

---

You will hear TWO texts, one relating to Question 4 and one relating to Question 5. Each text will be played twice. There will be a short break between the first and second playings in which you may make notes.

Listen carefully to each text and then answer the questions in TAMIL.

**Marks** | You may make notes in this space.

**Text 4** Click here

4. From the conversation what do we learn about these two people and their relationship? **3**

   இந்த உரையாடலின் மூலம் இவ்விருவரைப்பற்றியும் அவர்களது உறவுமுறை பற்றியும் நாம் எவற்றை அறிந்து கொள்ளலாம்?

   - ______________________________
     ______________________________
   - ______________________________
     ______________________________
   - ______________________________
     ______________________________



www.theallpapers.com

| | Marks | You may make notes in this space. |
|---|---|---|

**Text 5** Click here

5. (a) In which basic skills are students performing well? Why? **2**

எந்த அடிப்படைத் திறன்களில் மாணவர்கள் சிறப்பாக உள்ளார்கள்? ஏன்?

___

___

___

(b) State the ways that newspapers and magazines are delivered in Australia. **2**

அவுஸ்ரேலியாவில் பத்திரிகைகள் சஞ்சிகைகள் எவ்வழிகளில் விநியோகிக்கப்படுகின்றன?

- ___
- ___

(c) How do the activities of the Tamil Development Society justify its name? **3**

கழகத்தின் பெயர் அதற்குப் பொருத்தமானதுவே என்பதை அதன் செயற்பாடுகள் எவ்வாறு நிரூபிப்பனவாக உள்ளன?

- ___
  ___
- ___
  ___
- ___
  ___

**End of Section 1**



www.theallpapers.com

Student/Registration Number | | | | | | | | | | | Centre Number | | | | | | |

## 2005 Public Examination

# Tamil
## Continuers Level

## Section 2: Reading and Responding (30 marks)

**Instructions to Students**

1. Allow approximately 1 hour and 15 minutes for Section 2.
2. Write all your answers to the questions in Section 2 in this booklet in blue or black ink or ball-point pen.
3. You must answer ALL questions in Part A and Part B.
4. Answer Part A in ENGLISH and Part B in TAMIL.
5. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
6. All question booklets will be collected at the end of the examination.

*This examination is used for the HSC (New South Wales), the NTCE (Northern Territory), the SACE (South Australia), the TCE (Tasmania), the VCE (Victoria), and the WACE (Western Australia).*

*© Victorian Curriculum and Assessment Authority 2005*

www.theallpapers.com

**Part A** (Questions 6–7)
(20 marks)

*When judging performance in this part, the examiner(s) will take into account the extent to which the student demonstrates the capacity to:*

- *understand general and/or specific aspects of texts, by, for example, comparing, contrasting, summarising, or evaluating, and convey the information accurately and appropriately.*

6. Read the text and then answer in ENGLISH the questions that follow.

<u>தாய்</u>

“என்னங்க, இதோ பாருங்க எங்கள் வீட்டிலேயும் இடம் கஷ்டமாக இருக்கிறது. என் தங்கச்சி வருகிற முப்பதாம் திகதி கனடாவில் இருந்து வரப்போறா. எப்படியும் ஒருமாதமாவது என்னோட இருப்பா. இடப்பற்றாக்குறையைச் சமாளிக்க, பேசாம உங்கட அம்மாவை முதியோர் இல்லத்தில சேத்திடுங்க”.

சிவந்து போனது நிமலனின் முகம். “வயதான எனது அம்மாவுக்கு இந்த வீட்டில இடம் இல்லாமல் போய் விட்டதா நீலா? உன் தங்கை வருவதற்காக நீரிழிவு, இரத்த அழுத்தம் என்று இருக்கிற அந்த வயதானவரை முதியோர் இல்லத்தில் விடுவதா? இதில் எனக்குச் சம்மதம் இல்லை”.

“ஆமா ஊரில இல்லாத அதிசயம் உங்கட அம்மா. எல்லோருக்கும் தானே நீரிழிவும் இரத்த அழுத்தமும் இருக்கு. முதியோர் இல்லத்தில விட்டிட்டுப் பார்க்காமலா இருக்கப்போறம்? இன்றைக்கு இன்ரநெற்றில பார்த்து ஏதாவது ஒரு வயோதிபர் இல்லத்தில விடத்தான் போறன்”.

அவளை எரித்து விடுவதுபோலப் பார்த்தான் நிமலன். அதைவிட அவனால் ஒன்றும் செய்ய இயலவில்லை. அவ்வளவு பிடிவாதக்காரி அவள்.

அந்த வாரத்திலேயே நிமலனுக்குக் கடும் வேலை இருக்கிற புதன்கிழமை, தேவையான பொருட்களைப் பெட்டியில் எடுத்துக் கொண்டு தான் தெரிவுசெய்த இல்லத்துக்குப் புறப்பட ஆயத்தமானாள். அம்மாவை நிமிர்ந்து பார்க்கவே முடியவில்லை நிமலனுக்கு. பரிதாபமாகவும் அழுகையாகவும் இருந்தது. மனம் குமுறினான்.

நிமலன் ஒரே பிள்ளை. அவனில் அம்மாவுக்கு உயிர். பத்து வயதில் அப்பா இறந்துவிட்டார். அம்மாதான் அவனை முன்னுக்குக் கொண்டு வந்தார். உதைபந்தாடியபோது கால் புரண்டு மூன்று மாதங்கள் படுக்கையில் இருந்தபோது, இரவுபகலாகக் கண்விழித்து அவனது உடல் தேற மிகவும் கஷ்டப்பட்டாள். அப்படிப்பட்ட அம்மாவுக்குத் தான் செய்யும் நன்றிக்கடன் இதுவா என்று ஏங்கித்தவித்தான். ஆனால் அடங்காப்பிடாரி நீலா முன் அவனால் எதுவும் செய்ய முடியவில்லை.

மாமியாருக்கு ஏதோ சொல்லி, தயார்படுத்தி விட்டாள் நீலா. வாசலில் வாடகைக் கார் வந்து நின்றது. கைத்தாங்கலாக அழைத்துக் கொண்டு போனாள் நீலா. ஈயாடாத முகத்துடன் கூடவே சென்றான் நிமலனும். இரண்டுமணி நேரத்தில் முதியோர் இல்லம் சென்றுவிட்டார்கள். அங்கே இருந்த மற்றைய முதியோர்கள் புதிய அங்கத்தவர் வருகையைக் காண, தத்தம் அறைகளில் இருந்து தலைகளை நீட்டினார்கள்.

“ஏன்டி நீலா நீ இங்கே?” கேட்டுக்கொண்டே வந்த நபரைப் பார்த்த நீலா அதிர்ந்து போனாள்.

“இங்... கே... எப்... படி... வந்... தீங்க?” தத்தித்தத்தி வந்தன அவள் வாயிலிருந்து வார்த்தைகள்.

“அதை என் கேட்கிறாய்? எல்லாம் உன் அண்ணியின் வேலைதான். அவளின் அண்ணன் அமெரிக்காவில் இருந்து வரப்போறானாம். அவர்கள் வரும்போது நான் வீட்டில் இருக்கக் கூடாதென்று, உன் அண்ணனின் உதவியோடு இங்கு கொண்டுவந்து விட்டிட்டுப் போயிட்டா”.

கண்கள் குளமாகிய அம்மாவைப் பார்த்துக் கதறி அழுதாள் நீலா.



www.theallpapers.com

QUESTIONS

**Marks**

(a) List four social issues that the story raises. **4**

- 
- 
- 
- 

(b) Explain the twist at the end of the story. **2**

(c) Briefly describe Neela's and Nimalan's characters as portrayed in this story. **4**

Neela

Nimalan


www.theallpapers.com

7. Read the text and then answer in ENGLISH the questions that follow.

## இலக்கிய வடிவங்கள்

இன்று நாம் பல வகையான தமிழ் நூல்களையும் ஆவணங்களையும் இணையத்தளம் (Internet) மூலமாகவும் இறுவட்டு (CD) மூலமாகவும் பெற்று வாசிக்கக்கூடியதாக உள்ளது. ஆனால் அச்சு இயந்திரங்களே கண்டுபிடிக்கப்பெறாத காலம் ஒன்று இருந்தது.

உலகப்புகழ்பெற்ற, சுவைநிறைந்த தமிழ் இலக்கியங்களில் அநேகமானவை அச்சு இயந்திரங்கள் தோன்றுவதற்கு, பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே ஆக்கப் பெற்று விட்டன. நீண்டகாலமாக இவை வாய்மொழி மூலமாகவும், பின் பனையோலைகளில் எழுதப்பெற்றும், தலைமுறை தலைமுறையாகக் கையளிக்கப்பெற்று வந்தன. இவையனைத்தும் செய்யுள்களாக அல்லது சிறந்த பாடல்களாக அமைந்திருந்தமையால் இசையோடு பாடி நினைவு நிறுத்தல் இலகுவாயிற்று. ஒரே ஒலிவடிவுள்ள சொற்கள், உதாரணமாக பாடல் ஒன்றில் வரும் சூறா, ஏறா, நீறா, வீறா ஆகிய முதலடிச் சொற்கள் மனனம் செய்யவும் மீட்டுக்கூறவும் இலகுவாயிருந்தன. எனவே இக்காலத்தில் வசன இலக்கியங்கள் தோன்ற வாய்ப்பேற்படவில்லை.

ஆறுமுகநாவலரே அச்சு இயந்திரங்களை முதலில் நன்கு பயன்படுத்தியவராவார். கடுதாசி பயன்பாட்டுக்கு வந்த பின்னர் அதுவரை அழியாதிருந்து, ஓலைவடிவிலும் வாய்மொழி வடிவிலும் காணப்பெற்ற நூல்கள் கையெழுத்து நூல்களாயின. பின்னர் நாவலர் இவற்றை அச்சிற் பதிப்பித்தார். தானே வசனநடை நூல்கள் பலவற்றை ஆக்கியும் பதிப்பித்தும் தமிழுக்குப் பெரும் தொண்டாற்றினார். இதற்காக இவர் சிதம்பரத்திலும் யாழ்ப்பாணத்திலும் அச்சு இயந்திரசாலைகளை அமைத்தார்.

இன்று தமிழ் இலக்கியங்கள் பல வேற்று மொழிகளில் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளன. தமிழ் செம்மொழியாவதற்கு இவையும் காரணமாயின.



www.theallpapers.com

QUESTIONS

**Marks**

(a) How was Tamil literature preserved before paper was used? **2**

- ____________________________________________________
- ____________________________________________________

(b) In what two ways did people memorise literature in its oral form? **2**

- ____________________________________________________
- ____________________________________________________

(c) What evidence is there that Tamil literature is valued throughout the world? **2**

____________________________________________________

____________________________________________________

____________________________________________________

____________________________________________________

(d) What was Arumuga Navalar's contribution to Tamil literature? **4**

- ____________________________________________________
  ____________________________________________________
- ____________________________________________________
  ____________________________________________________
- ____________________________________________________
  ____________________________________________________
- ____________________________________________________
  ____________________________________________________



www.theallpapers.com

**Part B** (Question 8)
(10 marks)

---

*When judging performance in this part, the examiner(s) will take into account the extent to which the student demonstrates the capacity to:*

- *understand general and specific aspects of a text by identifying, analysing, and responding to information;*
- *convey information coherently (structure, sequence, accuracy and variety of vocabulary and sentence structure) and appropriately (relevance, use of conventions of the text type).*

---

8. Read the text and then answer the question in 150–200 words in TAMIL on page 7.

தமிழ்ப் பெற்றோர்களே!

பெற்றோர்கள் பிள்ளைகளுடன் எவ்வாறு நல்லுறவுடன் வாழலாம் என்பதுபற்றி உங்கள் முன் பேச வந்துள்ளேன்

நீங்கள் பழம்பெரும் கலாச்சாரப் பின்னணியைக் கொண்டவர்கள். இப்பின்னணியில் இருந்து வரும் உங்கள் பிள்ளைகள் அவுஸ்ரேலியச் சமூகத்துடன் ஒன்றுபட்டு, இசைவாக்கம் பெற்று ஒருங்கிணைந்து வாழ வேண்டும் என்பது யதார்த்தமாகும். நீங்கள் உங்கள் கலாச்சார அடையாளங்களை இறுக்கித் திணிக்க முயலும்போது, அவர்கள் அவுஸ்ரேலிய அடையாளங்களின் மீது ஈர்க்கப்பெற்று அவற்றைத் தம்வாழ்க்கையில் சேர்த்துக்கொள்ள முயல்வர். அவற்றைப் பெருமெடுப்பில் எதிர்க்காதீர்கள். பதிலாக நீங்களும் உங்கள் உறவினர்களும் நடந்து காட்டுவதன்மூலமும், சிறுவயதிலிருந்தே பொருத்தமான கதைகள் சம்பவங்களைக் கூறுவதன்மூலமும் அவர்கள் இருபக்கங்களில் இருந்தும் சிறந்தவற்றைத் தெரிவுசெய்ய வழிப்படுத்துங்கள். அவர்களின்மேல் நீங்கள் அதிக அன்பு செலுத்துவதை உணரச்செய்து தங்கள் உள்ளத்தில் இருப்பவற்றை அவர்கள் உங்களிடம் கூறக்கூடியவாறு நடந்துகொள்ளுங்கள்.

அன்பானவர்களே!

குறிப்பாக வீட்டில் பேசும் மொழி, உண்ணும் உணவு, பொழுதுபோக்கு, உறவினர்களுடன் உறவாடுதல், கற்கைத்துறைகளைத் தெரிவுசெய்தல், தொழில் தேடிக்கொள்ளுதல் முதலிய ஒவ்வொரு அம்சங்களிலும் நீங்கள் இணக்கப்பாட்டைக் காண முயலுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு இணக்கப்பாட்டைக் கண்ட பல பெற்றோர்கள் தமது பிள்ளைகளைச் சாதனை வீரர்களாக ஆக்க வழி செய்ததுடன் தாமும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்.

உங்கள் பிள்ளைகளின் விருப்பங்கள், திருப்திகள், இயலும் தன்மைகள் ஆகியவற்றை நாளுக்குநாள் அறிந்துகொண்டு, அவர்களுடன் கலந்துபேசி, பொருத்தமான முடிவை அவர்களே மேற்கொள்ள வழிசெய்யுங்கள். அதன்மூலம் அவர்களும் நீங்களும் மகிழ்ச்சியாகவும் நிம்மதியாகவும் வாழுங்கள்.

பொறுமையாக எனது பேச்சைக் கேட்ட உங்களுக்கு எனது நன்றிகள்.

QUESTION

Based on the ideas presented in this speech, write an informative article in 150–200 words titled 'Getting on with your parents!' in Tamil for a Tamil youth magazine.

இப்பேச்சில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை அடிப்படையாகக்கொண்டு "பெற்றோருடன் இணைந்திருங்கள்" என்ற தலைப்பில், அவுஸ்ரேலியத் தமிழ் இளைஞர்களுக்கு வழிகாட்டும் வகையில், தகவல்களை வழங்கும் ஒரு கட்டுரையை, தமிழ் இளைஞர் சஞ்சிகை ஒன்றுக்காக 150–200 சொற்களில் எழுதுக.



www.theallpapers.com

*Do not remove this page from the question booklet.*

| Student/Registration Number | | | | | | | | | | | | Tamil Continuers Level |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

| Centre Number | | | | | | |
|---|---|---|---|---|---|---|

Question 8





www.theallpapers.com

**End of Section 2**



www.theallpapers.com

Student/Registration Number | | | | | | | | | | | Centre Number | | | | | | |

**2005 Public Examination**

# Tamil

## Continuers Level

### Section 3: Writing in Tamil (15 marks)

**Instructions to Students**

1. Allow approximately 45 minutes for Section 3.
2. Write your answer to a question from Section 3 in this booklet in blue or black ink or ball-point pen. Space is provided for you to make notes.
3. You must answer ONE question in TAMIL.
4. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
5. All question booklets will be collected at the end of the examination.

*This examination is used for the HSC (New South Wales), the NTCE (Northern Territory), the SACE (South Australia), the TCE (Tasmania), the VCE (Victoria), and the WACE (Western Australia).*

© *Victorian Curriculum and Assessment Authority 2005*

www.theallpapers.com

**Section 3** (Questions 9–12)
(15 marks)

---

*When judging performance in this section, the examiner(s) will take into account the extent to which the student demonstrates:*

- *relevance and depth of treatment of ideas, information, or opinions;*
- *accuracy and range of vocabulary and sentence structures;*
- *the capacity to structure and sequence response and capacity to use conventions of the text type.*

---

Answer ONE question from this section in 200–250 words in TAMIL.

9. You have been awarded the 'Australian Young Achiever' award. Write an informal letter to a distant friend outlining your achievement and sharing your future plans.

   நீர் 'அவுஸ்ரேலிய இளஞ்சாதனையாளர்' விருதைப்பெற்றுள்ளீர். தொலைவில் வதியும் உமது நண்பருக்கு உமது சாதனை பற்றிய குறிப்புக்களைக் கூறியும், உமது எதிர்காலத் திட்டங்களைப் பகிர்ந்து கொள்ளும் வகையிலும் ஒரு கடிதம் எழுதவும்.

10. Your school council has asked for students' opinions on canteen food items. You feel strongly about healthy food in the canteen and decide to convince your fellow students. Write a persuasive report entitled 'Healthy eating improves your brainpower'.

    உமது பாடசாலை நிர்வாகத்தினர் பாடசாலைச் சிற்றுண்டிச்சாலை உணவுப் பண்டங்கள் பற்றி மாணவரின் அபிப்பிராயங்களைக் கோரியுள்ளார்கள். சிற்றுண்டிச்சாலையில் உடல்நலத்திற்கு உகந்த உணவுப்பண்டங்கள் விற்கப்படவேண்டும் என்ற தீவிரமான கருத்தைக் கொண்டுள்ள நீர், அக்கருத்தை உமது சகமாணவர்களுக்கு உணர்த்தி, அவர்களை உமது வசப்படுத்தக் கூடியதாக 'ஆரோக்கியத்துக்கு உகந்த உணவு சிந்தனைச்சக்தியை அதிகரிக்கும்' என்ற தலைப்பில் ஒரு அறிக்கையைத் தயாரிக்க.

11. A Tamil movie you watched recently made you rethink your views on Tamil cinema. Evaluate the film in a review to be published in your Tamil school magazine.

    நீர் அண்மையில் பார்த்த ஒரு தமிழ்த் திரைப்படம், நீர் கொண்டிருந்த தமிழ்த் திரைப்படம் பற்றிய உமது அபிப்பிராயத்தை மீளச் சிந்திக்கத் தூண்டி உள்ளது. அத்திரைப்பட மதிப்பீட்டு விமர்சனத்தைத் தமிழ்ப் பாடசாலைச் சஞ்சிகைக்காகத் தயாரிக்கவும்.

12. Write a diary entry recording a personal unforgettable experience.

    உமது மனதை விட்டு அகலாதிருக்கிற சொந்த அனுபவம் ஒன்று பற்றிய தினக்குறிப்பேட்டுப் பதிவை எழுதுக.



www.theallpapers.com

You may make notes in this space.





www.theallpapers.com

Question Number:



www.theallpapers.com

www.theallpapers.com

**End of Section 3**



www.theallpapers.com